# தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணிக்கு பயிலுனர் அதிகாரிகளை இணைத்துக்கொள்ளல், பயிற்சிநெறி இலக்கம்-36

## <u>விண்ணப்பம் கோரல்</u>

தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணிக்கு துடிப்பும் ஆற்றலும் ஆளுமையும் கொண்ட இளம் பயிலுனர் அதிகாரிகள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் 30 வயதுக்கு குறைந்த பட்டதாரி ஆசிரியர்கள் அல்லது கல்வியியல் கல்லூரி ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும்.

ஆங்கிலம், தமிழ், கணணி, பொருளியல், சட்டம், கணக்கியல், சங்கீதம் ஆகிய துறைகளில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் திருமணம் முடிக்காதவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியில் இணைந்துக்கொள்ளும் ஆசிரியர்கள் இராணுவச்சேவையில் இணைக்கப்படும் பட்சத்தில் ஆசிரிய சேவையின் சகல வரப்பிரசாதங்களுடன் இராணுவ சேவைக்குறிய சம்பளத்தையும் வசதிகளையும் பெற்று சமூகத்தில் வேறுபட்டு தெரிகின்ற நட்சத்திர ஆசிரியர்களாக திகழ முடியும்.

**அடிப்படை தகைமைகள்**

அ. 30 வயதுக்கு குறைந்தவராக இருத்தல்.

ஆ. திருமணமாகாதவர் பெரிதும் விரும்பப்படுவர்.

இ. விசேட திறமைகள் மற்றும் கல்வித்தகைமைகள் கவனிக்கப்படும்.

ஈ. தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணி அதிகாரிகளுக்குரிய சகல குணப்பண்புகளும் இருக்க வேண்டும்.